**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி , M.L.,**

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**பழனி.**

**2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**இ.ம.எண்.6/2023**

**இன்**

**அ.வ.எண்.75/2011**

1. அய்யலுசாமி (இறப்பு)

2. M. தனபாலகன் --- மனுதாரர்/2–ம் வாதி

/எதிர்/

1. K. நாராயணசாமி (இறப்பு)

2. குட்டி என்ற சுதேஸ்குமார்

3. பாலசுப்பிரமணியன்

4. சுப்புலட்சுமி

5. கலைச்செல்வம்

6. சாந்தவேணி

7. ராஜேஸ்வரி

விஸ்வகுமார்

9. புவனேஸ்வரி

10. தனலட்சுமி --- எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 14.10.2024 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/2–ம் வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் P. லிங்கசாமி அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி. கனிமொழி பாப்புச்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 10

எதிர்மனுதாரர்கள்/4 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதரப்பாக இருந்தும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுவில் கண்ட ஆவணங்களை பழனி, 2 நிர் இணை சார்பதிவாளர் அலுவலர் அவர்கள் கடந்த 07.12.1987 ஆம் தேதியன்று 2 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம், பழனி ஆவணம் எண்.70/1987 BKIV – ன் பொது அதிகார ஆவணத்தையும் மற்றும் மேற்படி பொது அதிகார ஆவணம் கடந்த 16.04.1992 ஆம் தேதியன்று சங்கரநயினார் கோவில் சார்பதிவாளர் அலுவலகம், 4 புத்தகம், 54 தொகுதி, 195, 196–ன்படி ஆவணம் எண்.45/1992 படி ரத்து செய்யப்பட்டு, அது பழனி 2 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 01.06.1992 ஆம் தேதியன்று Endorsement செய்யப்பட்டுள்ள உத்தரவு பிறப்பிக்கவேண்டி சி.பி.சி. ஆர்டர் 16 ரூல் 1(2) மற்றும் பிரிவு 151–ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/2–ம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் 2–ம் வாதி. அசல் வழக்கானது விளம்புகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 07.12.1987 ஆம் தேதியிட்ட பொது அதிகார ஆவணமானது 1–ம் வாதியால், 1–ம் பிரதிவாதிக்கு எழுதிப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சொத்துக்களை பொது அதிகாரம் கொடுத்த 1–ம் வாதி நேரடியாக பராமரிப்பு செய்துகொள்ள முடிவு செய்து 16.04.1992 ஆம் தேதியிட்ட ரத்து ஆவணம் 1–ம் வாதியால் ஏற்படுத்தப்பட்டு மேற்படி ஆவணம் சங்கரநயினார் கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.45/1992 ஆக பதிவு செய்யப்பட்டது. இவ்வாறாக பொது அதிகாரம் ரத்து செய்யப்பட்ட விபரம் பழனி 2–ம் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு அதனை பழனி 2–ம் இணை சார்பதிவாளர்

பெற்றுக்கொண்டு பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட்ட விபரத்தை 01.06.1992 அன்று Endorsement செய்துள்ளார். மேற்படி விபரத்தை மறைத்து 1–ம் பிரதிவாதி பிரம்மஸ்ரீ விஸ்வாமித்ரம் மகரிஷி யோகா மௌன ஆசிரமம் டிரஸ்டுக்கு மோசடியாக கிரைய ஆவணம் பதிவு செய்துள்ளார். பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட்ட Endorsement ஆவணங்களை நகல் பெற 2–ம் வாதி மனு செய்தபோது பொது அதிகாரம் கொடுத்த நபர் அல்லது பொது அதிகாரம் பெற்ற நபர் மட்டுமே சான்றுகள் பெறமுடியும் எனத் தெரிவித்து நகல் கொடுக்க மறுத்துவிட்டனர். எனவே பழனி 2–ம் இணை சார்பதிவாளர் கடந்த 07.12.1987 ஆம் தேதியிட்ட பொது அதிகார ஆவணத்தையும், மேற்படி பொது அதிகாரம் 16.04.1992 அன்று சங்கரநயினார் கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ரத்து செய்யப்பட்டு 01.06.1992 அன்று Endorsement செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் சான்றிட்ட நகல்களாக நீதிமன்றத்தில் முன்னிலையாகி குறியீடு செய்ய உத்தரவிடவேண்டும்.

<u>3. 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 2–ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு</u>

2–ம் வாதி தனபாலன் என்பவர் வழக்கறிஞர் ஆவார். மேற்படியார் தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.28 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்துள்ளார். வாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கானது நிலுவையில் இருக்கும்போது வா.சா.1 பின்யோசனை செய்து வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்களைத் தாக்கல் செய்வதற்கு ஒன்றன்பின் ஒன்றாக மனுத் தாக்கல் செய்து வழக்கைத் தாமதப்படுத்தி வருகிறார். சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் கொடுக்க மறுத்துவிட்டதாகக் கூறப்படும் நகல் மனுவை மனுதாரர் தாக்கல் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது. மேற்படி ஆவணங்களைத் தாக்கல் செய்வதால் வழக்கில் எந்த ஒரு பலனும் ஏற்படப்போவதில்லை. காலவிரையம் ஏற்படுத்துவதற்காக மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு தள்ளுபடியாக வேண்டும்.

4. இந்த மனுவில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இந்த மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. தீர்வு:–

6.1. மனு, எதிர்உரை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் தரப்பில் 1–ம் வாதி 1987 ஆம் வருடம் 1–ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த பொது அதிகார ஆவணம் பழனி 2–ம் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சொத்தை தானே நிர்வகிக்க முடிவு செய்த 1–ம் வாதி 16.04.1992 அன்று மேற்படி பொது அதிகாரத்தை ரத்து செய்து, ஆவணம் ஏற்படுத்தி அதனை சங்கரநயினார் கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றும், அந்த விபரமானது பழனி 2–ம் இணை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு அந்த விபரத்தை 01.06.1992 அன்று Endorsement செய்துள்ளார்கள் என்றும், மேற்படி ஆவணங்களின் நகல்களை பொது அதிகாரம் கொடுத்த அல்லது பொது அதிகாரம் பெற்ற நபர்கள் தான் பெற இயலும் என்று சொல்லி நகல் மனு நிராகரிக்கப்பட்டதாகவும், எனவே பழனி 2–ம் இணை சார்பதிவாளரை மேற்படி ஆவணங்கள் சகிதம் நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியமளிக்க உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

6.2. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் ஒன்றன்பின் ஒன்றாக புதிய ஆவணங்களைத் தாக்கல் செய்து வழக்கில் காலதாமதம் ஏற்படுத்துவதற்காகத் தெரிவித்து வாதிடப்பட்டுள்ளது.

6.3. வாதியின் வழக்குரையைப் பரிசீலித்ததில், 07.12.1987 ஆம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது பற்றியும், 16.04.1992 அன்று மேற்படி பொது அதிகார ஆவணம் ரத்து செய்யப்பட்டது

பற்றியும் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. 1–ம் வாதி, 1–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்ததாகச் சொல்லப்படும் பொது அதிகார ஆவணங்கள் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் 1–ம் வாதி மற்றும் 1–ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில், மனுதாரர் சார்பதிவாளரை மேற்படி ஆவணங்கள் பெற்றும், சாட்சியாக விசாரிக்க வேண்டுமெனக் கோரியுள்ளது நியானமானது என்றும், மனுதாரருக்கு அவர் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.10.18 17:18:37 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

மனுதாரர்/2–ம் வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் : இல்லை

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.10.18 17:18:43 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.